சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

''சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப் படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1978) நிறைவேற்றப்படவேண்டும்.'

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை:

''சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப் படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/1978) நிறைவேற்றப்படவேண்டும்.''

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(5) தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய-வாரம் செலுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1978).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

''சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்த சட்டமுன்வடிவு @(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1978) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.''

என்று முன்மொழிகிறேன்.

@ 631-632ஆம் பக்கத்தில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை,

''சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்த சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1978) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட வேண்டும்.''

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது. சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே:

''சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாயவாரம் செலுத்துதல்) திருத்த சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1978) நிறைவேற்றப்பட வேண்டும்''

என்று முன்மொழிகிறேன்,

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை

''சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாயவாரம் செலுத்துதல்) திருத்த சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/1978) நிறைவேற்றப்பட வேண்டும்.''

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(6) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1978).

மாண்புமிகு திரு எஸ்.டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே'

''சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு † (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1978) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.''

என்று முன்மொழிகிறேன்.

---

† 632-633ஆம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்